2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வெங்கடேஸ்வரபுரம் சிறு விவசாயிகள் இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 474.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் சிறு விவசாயிகள் இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் அமைக்க 1972ஆம் வருடத்திலே அனுமதி கொடுத்தும் மேற்படி சங்கம் நாளது தேதிவரை ஆரம்பிக்கப்படாமல் ஏன் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வெங்கடேஸ்வரபுரம் சிறு விவசாயிகள் இறவைப் பாசன கூட்டுறவு சங்கம் (எஸ்.பி.எல். 17) 12—6—1972 அன்று பதிவு செய்யப்பட்டு, 22—6—1972-லிருந்து வேலை துவக்கப்பட்டது. எனவே சங்கம் இன்னும் ஆரம்பிக்கப் படாமல் உள்ளது என்று கூறியிருப்பது சரியன்று.

திரு. இரா. தாமரைக்கனி : இந்தக் கேள்வியைப் போடும் போது இந்தச் சங்கம் துவக்கப்படவே இல்லை. இப்போது தான் இந்தச் சங்கம் கேள்விக்காக துவங்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இதுவரை, ஒன்பது ஆண்டுகளாக இந்தச் சங்கம் துவங்கப்படாமல் இருந்ததற்கு காரணமாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியல்ல. இந்தச் சங்கம் 22—6—1972-லேயே துவங்கப்பட்டுவிட்டது.

டி.யூ. சி. எஸ். நிர்வாகிகள் தேர்தல்.

*வினா எண் 475.—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டி.யு.சி.எஸ்.-ல் கடந்த சில ஆண்டுகளாக பங்குதாரர்கள் அடங்கிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெறவில்லை என்பதை அறிந்து தேர்தல் நடத்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில் தேர்தல் எப்போது நடத்தப்படும் ?